# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 252/மா/2025
**நாள்: 13. 03.2026**

R. மயில்சாமி,
மதுரை. --- முறையீட்டு மனுதாரர்

(1) உதவி ஆணையாளர்,
மண்டலம் 3 (மத்தியம்).
மதுரை மாநகராட்சி.

(2) R. கனி, உதவிப் பொறியாளர்.
மண்டலம் 3 (மத்தியம்).
மதுரை மாநகராட்சி.

(3) A. கற்பகவள்ளி,
ஆரப்பாளையம், மதுரை–16. --- எதிர்மனுதாரர்கள்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவரின் 02.06.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.06.2025 அன்று பெறப்பட்டு 252/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவர் தனது 02.06.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

> “மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) வார்டு எண் 57ல் குரு தியேட்டர் to ஆரப்பாளையம் செல்லும் D.D.ரோடு, வடக்குபுரம் கதிரவன் பேக்கரி மற்றும் கணேஷ் ஸ்டோர் அருகில் மூன்று மாடி வர்த்தக கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. அக்கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட திட்ட அனுமதி விபரம் பற்றிய கட்டிடத்திற்கு முன்பாக பெயர் பலகை வைக்கவில்லை. இது குறித்த புகாரினை மாநகராட்சி புகார் இணைய தளத்தில் 27.03.2025 தேதியில் புகார் அனுப்பி இருந்தேன். புகார் எண் 120645 நாள் 27.03.2025. ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. பின்பு 15 தினங்கள் கழித்து மீண்டும் இணையதளத்தில் புகார் அளித்தும் என்னுடைய புகார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. எனது கைபேசி எண்ணுக்கு, நடவடிக்கை எடுக்கும் அலுவலர் பெயர் திரு. R. கனி, AE/JE கைபேசி எண் 9498748936 என்று குறுஞ்செய்தி வந்தது, மேற்படி கைபேசி எண்ணிற்கு நான் தொடர்பு கொண்டு திரு. R. கனி, AE அவர்களிடம் ஏன் இதுநாள் வரையிலும் கட்டிடத்திற்கு முன்பு அனுமதி வாங்கிய விபரங்கள் அடங்கிய பலகை வைக்கவில்லை என்று கேட்டதற்கு விபரங்கள் அடங்கிய பலகை கேட்டிற்கு உள்ளாக வைக்கப்பட்டது தேவை என்றால் நீங்கள் கட்டிடத்திற்கு உள்ளே சென்று பார்த்துக் கொள்ளுங்கள் என்று கட்டிட உரிமையாளர்

அவர்களிடம் கையூட்டல் பெற்றுக் கொண்டு பொறுப்பற்ற முறையில் எனக்கு பதில் கூறிவிட்டு கைபேசி இணைப்பை துண்டித்து விட்டார்.

மேலும் இதுகுறித்த புகாரினையும் திரு. R. கனி, AE அவர்கள் மண்டலம் 3 (மத்தியம்) மதுரை மாநகராட்சி அவர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டி 19.05.2025 தேதியில் விரைவு அஞ்சலில் (Speed Post) ET848609455IN மதுரை மாநகராட்சி ஆணையாளர் (Commissioner) அவர்களிடம் புகார் அளித்தும் இன்று வரையிலும் நடவடிக்கை எடுக்கவில்லை.

மக்கள் வரி பணத்தில், ஊதியம் பெற்றுக் கொண்டு, தன் கடமையை செய்ய தவறியும், தனி நபர் கட்டிட உரிமையாளர் அவர்களிடம் கையூட்டல் பெற்றுக் கொண்டு ஒழுங்கீனமாக செயல்பட்டு வரும் திரு. R. கனி, AE அவர்கள் மீது துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், மற்றும் வேறு மாவட்டத்திற்கு பணியிடம் மாற்றம் செய்ய உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவன்புடனும் வேண்டிக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 18.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி, மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 11.11.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 28.10.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், மனுதாரர் தனது 06.11.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''எனது முறையீட்டு மனு எண் 252/மா/2025 நாள் 28.10.2025 மனு மீது விசாரணை 11.11.2025 முற்பகல் 11.15 மணிக்கு நடைபெறுவதாக விசாரணை நோட்டீஸ் பெற்றுக் கொண்டேன். எனக்கு 04.11.2025 தேதியில் இரண்டு சக்கர வாகனத்தில் சென்ற போது விபத்து ஏற்பட்டு காலில் அடிபட்டு உள்ளதால் விசாரணைக்கு ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டுகிறேன்.

எனது புகார் மனு 02.06.2025 தேதியிட்ட மனுவில் கூறியிருந்த R. கனி அவர்கள் உதவி செயற்பொறியாளர், மண்டலம் 3 (மத்தியம்), மதுரை அவர்கள் வணிக கட்டிடத்தின் திட்ட அனுமதி பெறப்பட்ட விபரம் அடங்கிய பலகையை வைப்பதற்கு பலமுறை இணையதளத்தின் வாயிலாக புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவர் மன்றத்தில் புகார் செய்வேன் என்றும் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. தனியார் கட்டிட உரிமையாளர் அவர்களிடம் ஏதோ ஒரு பலனை பெற்றுக் கொண்டு திட்ட அனுமதி பெற்றதற்கான விளம்பரப் பலகை வைக்க நடவடிக்கை எடுக்கவில்லை. பெயர் பலகை 15.08.2025 தேதிக்கு பின்புதான் அனுமதி விபரம் வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் Civil Appeal No.14604 of 2024 (SLP(C) No.36440-2014) Rajendra Kumar Barjatya and Another Vs UP AvasEvam Vikas Parishad & Ors உத்தரவின்படி அனுமதி பெறப்பட்டு கட்டப்பட்ட கட்டிடத்தின் திட்ட அனுமதியின் விபரத்தை கட்டிடத்திற்கு முன்பாக தெரியும்படியாக வைக்க வேண்டும். இதனை கண்காணிக்க வேண்டும் என்றும் 17.12.2024– உத்தரவிட்டுள்ளது. ஆனால் உச்சநீதிமன்ற உத்தரவினை மதிக்காத திரு. R. கனி உதவி செயற்பொறியாளர் அவர்கள் மீது Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules–ன்படி தன் கடமையை செய்ய தவறியும், தனியார் கட்டிடத்தின் உரிமையாளர் அவர்களுக்கு சாதகமாக செயல்பட்டு வந்தும், புகாரில் கூறப்பட்ட வணிக கட்டிடம் பல விலகள் உள்ளன. அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டி வரும் கட்டிடத்தை கண்காணிக்க தவறிய

R. கனி உதவி செயற்பொறியாளர் அவர்கள் மீது சட்டப் பிரிவு 17(b)–கீழ் கடுமையான துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும் இதுவே எனது வாக்குமூலமாக எடுத்துக் கொள்ள வேண்டுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

5. மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவி ஆணையாளர் 07.11.2025 நாளிட்ட தனது அறிக்கையினை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்:

''மதுரை மாநகராட்சி வார்டு எண் 57 குரு தியேட்டர் முதல் ஆரப்பாளையம் செல்லும் டி.டி. ரோட்டில் வடக்குபுறம் உள்ள கதிரவன் பேக்கரி மற்றும் கணேஷ் ஸ்டோர் அருகில் மூன்று மாடி வர்த்தக கட்டிடம் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் முன்பு திட்ட அனுமதி விபரம் அடங்கிய பலகை வைக்கவில்லை என திருமதி கனி (உதவிப் பொறியாளர் (பொ) வார்டு 57) என்பவர் மீது புகார் வரப்பெற்றது.

மேற்கண்ட புகார் தொடர்பாக திருமதி கனி, உதவிப் பொறியாளர் (பொ) என்பவர் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக மைய நிர்வாக பிரிவு சம்பந்தப்பட்ட பணியாளர் மீது நடவடிக்கை எடுக்க மனுதாரரின் கடிதம் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்புகார் தொடர்பாக திருமதி கனி என்பவரை விசாரணை செய்து உரிய அறிக்கை சமர்ப்பிக்க கோரி உதவி ஆணையாளர் (பணி) அவர்களிடமிருந்து 08.07.2025ல் கடிதம் வரப் பெற்றது.

திருமதி கனி என்பவருக்கு புகார் தொடர்பாக விசாரணை அழைப்பாணை கடிதம் உரிய விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்டது. தனியர் இப்புகார் தொடர்பாக வார்டு எண் 57 குருதியேட்டர் முதல் ஆரப்பாளையம் செல்லும் டி.டி. ரோட்டில் வடக்குபுறம் உள்ள கதிரவன் பேக்கரி மற்றும் கணேஷ் ஸ்டோர் அருகில் மூன்று மாடி வர்த்தக கட்டிடம் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் முன்பு திட்ட அனுமதி விபரம் அடங்கிய பலகை வைக்கப்பட்டதற்கான புகைப்பட நகல் மற்றும் உரிய விளக்கத்தினை கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட விபரங்கள் தங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. இந்நிலையில், எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) உதவி ஆணையாளர் தனது 10.11.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்ம3அ1/004277/2025–ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் மேற்கண்ட பொருள் தொடர்பாக நேரில் ஆஜராகுவதற்கு உதவி ஆணையாளர், மண்டலம் 3 (மத்தியம்) 193 மத்திய சட்டமன்ற தொகுதி வாக்காளர் பதிவு அலுவலராக இருப்பதால் தேர்தல் பணியின் காரணமாக என் சார்பாக திருமதி கிருஷ்ணா, உதவி செயற்பொறியாளர் (திட்டம்) என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் உரிய ஆவணங்களுடன் நேரில் ஆஜராகி உரிய விளக்கங்கள் அளிப்பார் என இவ்வலுவலக 07.11.2025 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. தற்போது மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் SIR–2026 தேர்தல் பணிக்கான ஆய்வு கூட்டங்கள் தினந்தோறும் நடைபெறுவதால் திருமதி கிருஷ்ணா நேரில் ஆஜராகி உரிய விளக்கங்கள் அளிக்க முடியாத காரணத்தினால் நேரில் ஆஜராகுவதற்கு மாற்று தேதி தருமாறு கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) உதவி ஆணையரின் கோரிக்கையினை ஏற்று புகார் மனு தொடர்பான விசாரணை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவ மன்றத்தில் 23.12.2025 அன்று நடைபெறும் எனத் தெரிவித்து விசாரணைக்கு ஆஜராகுமாறு எதிர்மனுதாரருக்கு 01.12.2025 தேதியிட்ட அழைப்பாணை மனுதாரருக்கு நகலிட்டு அனுப்பப்பட்டது.

8. மனுதாரர் 23.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) வார்டு எண் 57ல் குரு தியேட்டர் to ஆரப்பாளையம் செல்லும் D.D.ரோடு, வடக்குபுரம் கதிரவன் பேக்கரி மற்றும் கணேஷ் ஸ்டோர் அருகில் மூன்று மாடி வர்த்தக கட்டிடம் கட்டப்பட்டு வந்தது. அக்கட்டிடத்திற்கு வழங்கபட்ட திட்ட அனுமதி விபரம் பற்றிய கட்டிடத்திற்கு முன்பாக பெயர் பலகை வைக்கவில்லை. இது குறித்த புகாரினை மாநகராட்சி புகார் இணைய தளத்தில் 27.03.2025 தேதியில் அனுப்பி இருந்தேன். புகார் எண் 120645 நாள் 27.03.2025. ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. பின்பு 15 தினங்கள் கழித்து மீண்டும் இணையதளத்தில் புகார் அளித்தும் என்னுடைய புகார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. எனது கைபேசி எண்ணில் இருந்து திரு. R. கனி, AE/JE கைபேசி எண்ணிலிருந்து 9498748936 குறுஞ்செய்தி வந்ததை அடுத்து நான் தொடர்பு கொண்டு திரு.R. கனி, AE அவர்களிடம் ஏன் இதுநாள் வரையிலும் கட்டிடத்திற்கு முன்பு அனுமதி வாங்கிய விபரங்கள் அடங்கிய பலகை வைக்கவில்லை என்று கேட்டதற்கு, கேட்டிற்கு உள்ளாக வைக்கப்பட்டது தேவை என்றால் நீங்கள் கட்டிடத்திற்கு உள்ளே சென்று பார்த்துக் கொள்ளுங்கள் என்று கட்டிட உரிமையாளரிடம் கையூட்டல் பெற்றுக் கொண்டு பொறுப்பற்ற முறையில் எனக்கு பதில் கூறிவிட்டு கைபேசி இணைப்பை துண்டித்து விட்டார்.

மேலும் மேற்கண்ட கட்டிடம் குறித்து தகவல் அறியும் சட்டத்தில் 6753 சதுரடிக்கு அனுமதி பெறப்பட்டு அதற்கு மாறாக 11375 சதுரடிக்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

எனவே,

1) அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் பிரிவுகள் 56 (1) மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85ன் கீழ் Stop Work Notice/Notice Calling for approved plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய Lock & Seal and demolition வழங்கியும், அமலாக்க நடவடிக்கையும் எடுக்குமாறும்,

2) அலட்சிமாகவும், கடமை தவறியும் பணிபுரியும் திரு. R. கனி, AE அவர்கள் மண்டலம் 3 (மத்தியம்) மதுரை மாநகராட்சி அவர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

9. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் (திட்டம்) 23.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மனுதாரர் புகார் தொடர்பாக திருமதி.கனி, உதவிப்பொறியாளர் (பொ) மற்றும் மனுதாரர் ஆகியோர் பேசியது குறித்து உதவி செயற்பொறியாளராகிய எனக்கு விவரம் தெரிவிக்கப்படவில்லை. இருப்பினும் திருமதி.கனி, உதவி பொறியாளர் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் குறிப்பிட்ட கட்டிடம் விதி மீறல் கண்டறியப்பட்டு கட்டிட உரிமையாளருக்கு தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களிடம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

10. மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவி செயற்பொறியாளர் (திட்டம்) அவர்கள் 23.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்தது தொடர்பாக, எதிர்மனுதாரர்களான மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) உதவி ஆணையர், திருமதி கனி, உதவிப்பொறியாளர் மற்றும் கட்டிட உரிமையாளரான திருமதி A. கற்பகவள்ளி ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 20.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.01.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் மனுதாரருக்கு நகலிட்டு அனுப்பப்பட்டன.

11. இந்நிலையில், மனுதாரர் தன்னுடைய 14.01.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"நான் கடந்த 02.06.2025 தேதியில் மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–ல் பணிபுரியும் R. கனி, உதவி செயற்பொறியாளர் அவர்கள் பற்றி புகார் மனுவினை தங்களிடம் புகார் அளித்து இருந்தேன். அதன்படி, முறையீட்டு மனு எண் 252/மா/2025 தேதியில் 02.06.2025 புகார் பதியப்பட்டு மேற்படி வழக்கின் விசாரணைக்கு நேரடியாக ஆஜராக வேண்டி கடந்த மாதம் அறிவிப்பு நோட்டீஸ் பெறப் பெற்றேன். அதன்படி மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் நடுவத்தின் அறிவிப்பு நோட்டீசுக்கு மிக மிக மதிப்பளித்து கடந்த 23.12.2025 தேதியில் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகி எனது வாக்குமூலத்தையும் மற்றும் எழுத்துபூர்வமான (written statement) எனது கோரிக்கையும், தங்களிடம் சமர்ப்பித்துள்ளேன். இதனால் எனக்கு சென்னை சென்று வர சுமார் ரூ.4,000/– செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே வேறு வருமானம் ஏதும் கிடையாத சூழ்நிலையில் ஒரே வழக்கிற்கு இரண்டு முறை ஆஜராக முடியாத சூழ்நிலை ஏற்பட்டும், மேலும் எனக்கு முதுகு தண்டுவடம் வலியில் இருப்பதால் நான் நெடுந்தூரம் பயணம் செய்ய இயலாது என்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நான் கடந்த 23.12.2025 தேதியில் நேரடி விசாரணையில் ஆஜராகி விளக்கம் அளித்தும் எழுத்துபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டிக் கொண்டதின்படி மேற்படி R. கனி, உதவி செயற்பொறியாளர், மண்டலம் 3 (மத்தியம்) மற்றும் திருமதி A. கற்பகவள்ளி அவர்களின் கட்டிடத்தின் மீது சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டியும் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

12. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவிப் பொறியாளர் திருமதி R.கனி, 20.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள வார்டு எண்.57ல் குரு தியேட்டர் – ஆரப்பாளையம் செல்லும் DD Main Road, வடக்குபுறம் கதிரவன் பேக்கரி மற்றும் கணேஷ் ஸ்டோர் அருகில் கட்டடம் கட்டப்பட்டு வந்த நிலையில் அதற்கான வரைபட அனுமதி அடங்கிய அறிவிப்பு பலகை வைக்கப்படவில்லை என்று 27.03.2025 அன்று மனுதாரர் இணைய தளத்தில் அளித்த புகார் தொடர்பாக மனுதாரரிடம் தொலைபேசியில் மிகுந்த தன்மையுடன் கட்டிடத்தின் உள்ளே அறிவிப்பு பலகை உள்ளது என்று தெரிவித்தேன். இருப்பினும் மனுதாரர் கோரியபடி அறிவிப்பு பலகை ஒரு வாரத்திற்குள் கட்டிடத்தின் வெளிபுறம் அமைக்கப்பட்டது. மேலும், எனது குரல் இயல்பாக சிறிது கரகரப்பாக உள்ள நிலையில், மனுதாரர் தவறாக புரிந்துக்கொண்டுள்ளார். இருப்பினும் இனி வருங்காலங்களில் மாநகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம்ம தன்மையாக நடந்துக்கொள்வேன் என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மேற்கண்ட கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி 115/BL/2024/00732 நாள்.09.03.2024ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டது. கள ஆய்வில் விதிமீறல் இருப்பதை கண்டறியப்பட்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தங்கள்) சட்டம் 1998 (தமிழ்நாடு சட்டம் 9/1999) பிரிவு 334, 335 (1) (2) கீழ் 12.08.2024, 25.10.2024, 15.04.2025 மற்றும் 14.08.2025 ஆகிய தேதிகளில் தாக்கீதுகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

13. மற்றொரு எதிர்மனுதாரரான கட்டிடத்தின் உரிமையாளர் திருமதி A. கற்பகவள்ளி என்பவர் 20.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற

விசாரணைக்கு ஆஜராகுமாறு அனுப்பப்பட்ட அழைப்பாணை, இம்மாதிரியான விலாசம் இல்லை என திருப்பப்பட்டுள்ளது.

14. மனுதாரரின் மனு, வாக்குமூலம், கடிதம், எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை, செயற்பொறியாளர் (திட்டம்) மற்றும் உதவி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) வார்டு எண் 57ல் குரு தியேட்டர் to ஆரப்பாளையம் செல்லும் D.D.ரோடு, வடக்குபுரம் கதிரவன் பேக்கரி மற்றும் கணேஷ் ஸ்டோர் அருகில் மூன்று மாடி கட்டப்பட்ட வர்த்தக கட்டிடத்திற்கு வழங்கபட்ட திட்ட அனுமதி விபரம் பற்றி அக்கட்டிடத்தின் முன்பாக பெயர் பலகை வைக்கவில்லை என்பதால், இது குறித்த புகாரினை மனுதாரர் மாநகராட்சி புகார் இணைய தளத்தில் அனுப்பியதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், தனது கைபேசியில் குறுஞ்செய்தி வந்ததை கொண்டு திரு. R. கனி, AE அவர்களிடம் பேசும் போது கட்டிடத்திற்கு முன்பு வைக்கப்பட வேண்டிய திட்ட அனுமதி அடங்கிய பலகையை, ஏன் வைக்கவில்லை என்று கேட்டதற்கு, கட்டிடத்தின் உள்ளே அறிவிப்பு பலகை உள்ளது என்றும், கட்டிடத்தின் கேட்டிற்கு உள்ளே சென்று பார்த்துக் கொள்ளுங்கள் என்று மனுதாரருக்கு பதில் கூறப்பட்டது என்பதும், மேற்கண்ட கட்டிடம் குறித்து தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலின்படி 6753 சதுரடிக்கு அனுமதி பெறப்பட்டதற்கு மாறாக 11375 சதுரடிக்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், எனவே அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971–ன் கீழ் நடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் திருமதி R. கனி என்பவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் கடிதங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள வார்டு எண்.57ல் குரு தியேட்டரிலிருந்து ஆரப்பாளையம் செல்லும் DD Main Road, வடக்குபுரம் கதிரவன் பேக்கரி மற்றும் கணேஷ் ஸ்டோர் அருகில் கட்டடம் கட்டப்பட்டு வந்த நிலையில், அதற்கான வரைபட அனுமதி அடங்கிய அறிவிப்பு பலகை வைக்கப்படவில்லை என்பது தொடர்பாக, மனுதாரர் இணைய தளத்தில் அளித்த புகார் குறித்து மனுதாரரிடம் தொலைபேசியில் மிகுந்த தன்மையுடன் கட்டிடத்தின் உள்ளே அறிவிப்பு பலகை உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது என்பதும், மனுதாரர் கோரியபடி அறிவிப்பு பலகை ஒரு வாரத்திற்குள் கட்டிடத்தின் வெளிபுறம் வைக்கப்பட்டது என்பதும், இனி வருங்காலங்களில் மாநகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் தன்மையாக நடந்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், மேலும் மேற்கண்ட கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி 09.03.2024 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதும், கள ஆய்வில் இக்கட்டிடத்தில் விதிமீறல் இருப்பதை கண்டறியப்பட்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தங்கள்) சட்டம் 1998 (தமிழ்நாடு சட்டம் 9/1999)–ன்படி 12.08.2024, 25.10.2024, 15.04.2025 மற்றும் 14.08.2025 ஆகிய தேதிகளில் தாக்கீதுகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும் மதுரை மாநகராட்சி, மண்டலம் 3 (மத்தியம்)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர், உதவிப்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்ட மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) வார்டு எண்.57ல் குரு தியேட்டரிலிருந்து ஆரப்பாளையம் செல்லும் DD Main Road, வடக்குபுரம் கதிரவன் பேக்கரி மற்றும் கணேஷ் ஸ்டோர் அருகில் கட்டப்பட்ட கட்டிடம் குறித்து தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தங்கள்) சட்டம் 1998 (தமிழ்நாடு சட்டம் 9/1999)–ன்படி தாக்கீதுகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, மேற்கண்ட கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும், மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன்

உதவிப் பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, இனிவருங்காலங்களில் மாநகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொது மக்களிடம் கனிவாக நடந்துக் கொள்வதாக கூறப்பட்டுள்ளதை கடைபிடிக்க அறிவுரை வழங்குமாறும், மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் எண்.5, செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

(3) திருமதி R. கனி,
உதவிப் பொறியாளர்,
மண்டலம் 3 (மத்தியம்),
மதுரை மாநகராட்சி,
மதுரை.625 001.

(4) திருமதி A. கற்பகவள்ளி
கட்டிட உரிமையாளர்,
கதவு எண் 2, D.D. மெயின் ரோடு,
(கணேஷ் ஸ்டோர் அருகில்)
ஆரப்பாளையம்,
மதுரை–625 016.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(6) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர். 18/3/26

17/3/26